தொண்டை மண்டலம்

சோழிய வேளாளர் மரபு தரும சங்கம்

வெள்ளி விழா மலர்

—: 1949 :—

வெள்ளி விழா அங்கத்தினர்கள்

1. ம. தா. நாகபூஷண முதலியார்
2. செ. சாரங்கபாணி முதலியார்
3. வெ. ஜம்புலிங்க முதலியார்
4. மா. திருஞவுக்கரசு முதலியார்
5. க. பஞ்சாபிகேச முதலியார்
6. க. சந்திரசேகர முதலியார்
7. பு. சம்பந்த முதலியார்
8. செ. பாலசுந்தர முதலியார்
9. க. சிவராம முதலியார்
10. செ. ஷண்முகசுந்தர முதலியார் B.A.,
11. க. சண்முகசுந்தர முதலியார்
12. வெ. நடேச முதலியார்
13. ஆ. கோவிந்தசாமி முதலியார்
14. க. கணேச முதலியார்

தொண்டை மண்டலம் சோழிய வேளாளர் மரபு

நாட்டார். திரு நீலு. ஆறுமுக முதலியார்

Land Lord & Contractor (P. W. D.)

வேள்ளி விழாவின் தலைவர்

சங்கத்தின் அங்கத்தினர்கள்

தொண்டை மண்டலம்
சோழிய வேளாளர் மரபு தரும சங்கம்

(1915-ஆம் நிறுவப்பட்டது)

1949 — 50

கார்ய நிர்வாக அங்கத்தினர்கள்

அக்கிராசனாதிபதி	திரு.	க. துரைசாமி முதலியார்
உப அக்கிராசனாதிபதி	,,	செ. சுப்ரமணிய முதலியார்
காரியதரிசி	,,	க. கணேச முதலியார்
போக்கிஷதார்	,,	க. சுந்தரராஜ முதலியார்
நிர்வாக மெம்பர்கள்	,,	க. பஞ்சாபிகேச முதலியார்
	,,	ம. அருணசல முதலியார்
	,,	ம. விவேகானந்த முதலியார் B. SC., M. ED.
	,,	க. சந்திரசேகர முதலியார்
	,,	க. சண்முகசுந்தர முதலியார்

அங்கத்தினர்கள்

திருவாளர்
க. சொக்கலிங்க முதலியார்
செ. முத்துசாமி முதலியார்
செ. சுப்பிரமணிய முதலியார்
க. வேலாயுத முதலியார்
க. சின்னகண்ணு முதலியார்
க. துரைசாமி முதலியார்
தி. சு. ஆறுமுக முதலியார்
சாலை. பாலசுந்தர முதலியார்
அ. கோவிந்தசாமி முதலியார்
செ. சாரங்கபாணி முதலியார்
க. கோவிந்தராஜ முதலியார்
க. கணேச முதலியார்
ம. அருணாசல முதலியார்
ம. திருநாவுக்கரசு முதலியார்
வெ. ஜம்புலிங்க முதலியார்
க. பஞ்சாபிகேச முதலியார்
ம. வெ. சண்முகசுந்தர முதலியார்
ஆ. சிவக்யான முதலியார்
செ. ஜம்புலிங்க முதலியார்
செ. பாலசுந்தர முதலியார்
மீனாட்சிசுந்தர முதலியார்
ம. சாமிநாத முதலியார்
ம. விவேகானந்த முதலியார் B. SC.,
ம. மாணிக்க முதலியார் [M. ED.
செ. சண்முகசுந்தர முதலியார் B.A.
க. தணிகாசல முதலியார்
க சிவராம முதலியார்
க. கோபாலகிருஷ்ண முதலியார்
வெ. ல. கோபால் முதலியார்
ம. தா. நாகபூஷண முதலியார்
க. சண்முகசுந்தர முதலியார்
வி. கோவிந்தசாமி முதலியார்
சி. பி. சம்பந்த முதலியார்
ஆ. சிதாராம் முதலியார்
செ. ராஜாகண்ணு முதலியார்
வெ. கணேச முதலியார்
க. சந்திரசேகர முதலியார்
க. சுந்தரராஜ முதலியார்
க. மார்க்கசகாய முதலியார்
தா. தானப்ப முதலியார்
வி. நமச்சிவாய முதலியார்
வி. சண்முகசுந்தர முதலியார்
கோ. போ. சண்முக முதலியார்
வெ. நடேச முதலியார்
ம. கி. சினுவாச முதலியார்
பு. சுப்பிரமணிய முதலியார்
ம. தா. துளசிங்க முதலியார்
வி. காசிநாத முதலியார்
வி. வேலாயுத முதலியார்
வி. கபாலி முதலியார்
வி. சுப்பிரமணிய முதலியார்
வி. கணேச முதலியார்
வி. கோவிந்தசாமி முதலியார்
க. ராமசாமி முதலியார்
ம. கோவிந்த முதலியார்
மு. சொக்கலிங்க முதலியார்
பொ. கோவிந்தசாமி முதலியார்
ப. மணவாள முதலியார்
மு. கிருஷ்ணசாமி முதலியார்
ப. மு. பாலசுந்தர முதலியார்
பு வடிவேலு முதலியார்
நா. ஆறுமுக முதலியார்
வி. வேதாசல முதலியார்
அ. முருகேச முதலியார்
க. அழகேச முதலியார்
அ. சி. அப்பாமணி முதலியார்
அ. முத்துசாமி முதலியார்
ம. கோவிந்த முதலியார்
ஆ. கோவிந்தசாமி முதலியார்
க. இராஜவேலு முதலியார்
வி. தங்கவேலு முதலியார்
ஆ சொக்கலிங்க முதலியார்
க. இலக்குமணசாமி முதலியார்
க. நித்தியானந்த முதலியார்

தொண்டை மண்டலம் சோழிய வேளாளர் மரபுதரும சங்கம்வரலாறு

பண்டைய தமிழ் ராஜ்யங்களுள் சோழ நாடு சிறப்புற்றிருந்தது. சோழ மன்னர் தமிழர் மூன்னேற்றத்திற்காக மிகவும் பாடுபட்டுள்ளார்கள். வேளாளர் வகுப்பைச் சார்ந்தவர்கள் சோழ அரண்மணையில் மிக முக்கிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகங்களை வகித்து வந்தார்களென்பது கம்பர் எழுதிய நூல்களால் தெரியவருகிறது. சோழ அரசர்களுக்குத் தொண்டை நாட்டிலுள்ளவர்பால் பெருமையும், அன்பும் ஏற்பட்டதற்கு காரணமாயிருந்தவர் சேக்கிழார் பெருமான். ஆதலால் "தொண்டை நாடு சான்ரோருடைத்து" என்ற பழமொழி ஏற்பட்டது. சோழநாட்டு அரசனகிய தொண்டைமான் என்ற அரசன் தொண்டை மண்டலத்தை ஸ்தாபிதம் செய்தார் என சரித்திரமூலம் அறியவருகிறது. அவருடன் வந்த வேளாளர் தொண்டை மண்டலம் சோழிய வேளாளர் என்று வழங்கப்பட்டார்கள்.

நம் முன்னோர்களாகிய சோழிய வேளாள மரபினர் இடையருது பலவளஞ் சுரக்கும் இணையற்ற காவிரி நதியால் சூழப்பட்ட சோழநாட்டில் சிருஞ் சிறப்புமுற வாழ்ந்து வந்தனர். அவர்கள் சோழ நாட்டைவிடுத்து, தொண்டை நாட்டில் வந்து குடியேறினர்கள். அத் தொண்டை நாட்டிலே தொன்றுதொட்டு வாழ்ந்துவந்த மற்றைய வேளாள மரபினரும், பிறகு குடியேறியவர்களும் தனித் தனியே தத்தம் வாழ்க்கையைச் செம்மையாக

நடத்தி வந்தனர். அங்ஙனம் வாழ்ந்து வரும் நாளில், சோழிய வேளாள மரபினரில் சிலருக்குத் தொண்டை நாட்டில் வாழ்க்கை வசதிக் குறைவுகள் ஏற்பட்டமையால் தொண்டை நாட்டை விடுத்து மீண்டும் தமது சொந்த நாடாகிய சோழ நாட்டிற்கு போய்ச் சேர்ந்தனர். அவ்வண்ணம் சென்றவர்கள் போக நின்றவர்களில் சிலர் காணியாளர் எனப் பட்டம் பெற்றுத் தொண்டை மண்டலத்திலுள்ள புண்ணியகோட்டி நதி யென வழங்கும் குசஸ்தலை நதியைச் சார்ந்த கிராமங்களில் வாழ்ந்து வருவா ராயினர்.

அங்ஙனம், வாழ்ந்து வரும் நாளில், நமது மரபினர் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒற்றுமை யுடனும், சாதிக் கட்டுப்பாட்டிற்கு இணங்கியும் நடந்து கொள்வதற்காக விவகார ஆசாரம் என்னும் சட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு அதன்படியே நாளது வரையில் மிகவும் கிரமமாக வேறுபாடின்றி ஒருவருக்கொருவர் சம்பந்தம் செய்துகொண்டு தென்னாட்டிலுள்ள வெள்ளிவாயல், வெள்ளிவாயல் சாவடி, திருநிலை, குமரகிராளபாக்கம், அலமாதி, ஆயல்சேரி, அவணம்பாக்கம், தாமரைபாக்கம், கரிக் கலவாக்கம், சென்னைப்பட்டணம், திருமயிலாப்பூர், மணிமங்கலம் என்ற கிராமங்களில் பரவி சுற்றத்தா ரோடு ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு நமது மரபினர் ஏற்படுத்திக்கொண்ட விவகார ஆசார தரும சட்டத்தை அட்சய வருஷம் ஆனி மாதம் பதினாறும் தேதியன்று (28-6-1866) வெள்ளிவாயல் காட்டு பெரியனதம் வெ. வி. அப்பா சாமி முதலியார், போரூரான் முதலியார் ஆகிய இவர்கள் முன்னிலையில் திருவொற்றியூரில் கூடிய நமது சோழிய வேளாள மரபினர் மகா நாட்டுப்

பொதுக்கூட்டத்தில் வாசித்துக் காட்டி, யாவராலும் ஆமோதிக்கப்பட்டது. பின்னர், அக்காலம் தொடங்கி, நமது மரபினர் அனைவரும் அச் சட்டத்தை அனுசரித்து அதன்படி நடந்து வருவாராயினர்.

நம் வாழ்க்கையை பண்புற நடத்துவதற்கு நமது மூன்னோர்கள் மேற்க்கூறிய கிராமங்களில் வெள்ளிவாயல் கிராமத்தை தலைமைக் கிராமமாக்கி அதற்கு நாடு என்றும், அந் நாட்டில், தமக்குள்ளேயே பெரியதனக்காரரை ஏற்படுத்தி, அவரையே நாட்டார் என்றும் அழைக்கப்பட்டு வருகின்றனர். மற்றைய கிராமங்கள் ஒவ்வொன்றுக்கும் அவ்வவ்வூர் குடிகளின் அபிப்பிராயப்படி பெரியதனக்காரர்களை, நாட்டார் அவர்கள் அவ்வப்போது நடத்தும் ஏற்பாட்டின் மூலம் நமது குலாச்சார தருமங்களை காளது வரையில் பரிபாலனம் செய்து வருகிறார்கள்.

நமது மரபினரால் ஏற்படுத்தப்பட்ட தர்மங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 26-4-1915-ல் இந்திய அரசாங்கத்தின் 1860-ஆம் வருஷத்து 21-வது ஆக்டின்படி தொண்டை மண்டலம் சோழிய வேளாள மரபு தரும சங்கம் எனப் பெயரிட்டு ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அச்சங்கத்தை சென்னை அரசாங்கத்தில் S. 2 of 1915-16 புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இச் சங்கம் முதலில் 20 அங்கத்தினர்களுடன் ஆரம்பித்துத் தற்போது ஏறக்குறைய 80 அங்கத்தினர்களுடன் சிறப்புற்று விளங்கி வருகின்றது. இன்னும் அங்கத்தினர்களைச் சங்கத்தில் சேர்க்க முயற்சி செய்யும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறது.

இச்சங்கத்தில் நமது மரபினர், ஏற்படுத்தியுள்ள தருமங்களைப் பரிபாலிக்க ஆண்டு தோறும் சங்க அங்கத்தினர்களிலிருந்து தலைவர், உபதலைவர், காரிய தரிசி, பொருட்காப்பாளர் முதலிய நிர்வாக அங்கத் தினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றார்கள். இந்நிர் வாக அங்கத்தினர்கள் சங்கம் மேற்கொண்டுள்ள தரும பரிபாலனங்களையும் வரவு செலவு கணக்கு களையும் பார்வையிட்டு அறிக்கை பத்திரம் மூல மாக வருஷந்தோறும் கூடும் பொதுக கூட்டத் தில் சமர்ப்பிக்கிறார்கள். மேற்படி சங்கத்தார் மரபின் பொதுப் பணத்தைக் கொண்டு 1915-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 27-ம் தேதியன்று திருவொற்றியூர் தியாகராசப் பெருமான்

திருவொற்றியூரில் சங்க சத்திரம்

கீழண்டை மாட வீதி, மேலண்டை வாடையில் 165-வது கதவு இலக்கமுள்ள வீட்டு மனையை மேற்படி சங்கத்தின் பெயரால் வாங்கி செம் பியம் சப்-ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் ரெஜிஸ்தர் செய்து வைத்திருக்கின்றனர். அந்த இடம் நமது மரபு மகா நாட்டுக் கூட்டம் கூடுவதற்கு அனுகூல

நமது மரபினர் வசிக்கும் கிராமங்கள்

வெள்ளிவாயல் கிராமம்

வெள்ளிவாயல் சாவடி கிராமம்

திருகிலி சோமம்

அலமாதி சோமம்

ஆயல்சேரி ஆரம்

அணைப்பக்கம்

தாமரைப் பாக்கம்

கரிக்கல வாக்கம்

குமரசிரள பாக்கம்

சென்னைப் பட்டனம்



திரு மைலாப்பூர்

மணிமங்கலம்

திரு. க. துரைசாமி முதலியார்

தொண்டை மண்டலம் சோழிய வேளாளர் மரபு

தரும சங்கம் அக்கிராசனாதிபதி.

கரிக்கலவாக்கம் - சுப்பராய முதலியார்.

கரிக்கலவாக்கம்
சொக்கலிங்க முதலியார்

சென்றம்பாக்கம்
முத்துசாமி முதலியார்

வே. தங்கவேல் முதலியார்.

க. வேலாயுத முதலியார்.

வி. ஷண்முக சுந்தர முதலியார்.

செ. சுப்பிரமணிய முதலியார்.

செ. சாரங்கபாணி முதலியார்.

பு. தங்கவேலு முதலியார்.

வி. விஜய முதலியார் தரும பரிபாலன சிர்வாக அங்கத்தினர்கள்.



வே. ஜம்புலிங்க முதலியார்.
ம. காசபூஷண முதலியார்.
ம. விவேகானந்தா B.Sc. M. Ed.
செ. சண்முக சுந்தர முதலியார் B.A.

வி. விநாயக முதலியார்.



மயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர் தேவஸ்தானம்
தேவாரப் பாராயணன்
இன்னிசை மணி
ம. வே. சிங்காரவேல் முதலியார்.

வி. சோமசுந்தர முதலியார்

எட்டியாபுரம் சமஸ்தான வித்வான்
கவிராயர் வியாசர்பாடி சுந்தர முதலியார்

ஹானரபிள் க. கந்தசாமி முதலியார்,
B. A., B L.

செ. சாமமூர்த்தி முதலியார், B. A.

ம. சிவகாமந்தி, B. Sc. L. T. M.Ed.

செ. ஆண்முகசுந்தர முதலியார், B. A.

மாக இருந்து வருகிறது. மேற்படி சத்திரத்தில் ஆண்டு தோறும் மாசி மாதத்தில் நடைபெறும் நியாகராஜப் பெருமான் பிரம்மோத்ஸவ காலத்தில் சங்கத்தார் சுவாமிக்குத் திபாராதனையும், தீர்மோர் தருமமும் நடத்தி வருகின்றார்கள்.

பின்னர் 1927-ம் ஆண்டில் நமது சங்கத்திற்குக் காரியதரிசியாயிருந்து காலஞ் சென்ற புதுவை தங்கவேலு முதலியார், செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரி தாலுக்கா 14-ஆம் நெம்பர் சுரோத்திரியம் வெள்ளிவாயல் கிராமத்திலுள்ள தனக்குச் சொந்தமானதும் சுமார் ரூபாய் 300 பெறுமான மதிப்புடையதுமாகிய 1 ஏக்கர் 11 சென்ட் நீர்ப்பாசன வசதியுள்ள நஞ்சை நிலத்தை அக்காலத்தில் சங்கத்திற்கு அங்கத்தினராக இருந்து நிர்வாகம் வகித்த அன்பர்களின் அனுமதி பெற்று மேற்படி நமது சோழிய வேளாள மரபு சங்க நிர்வாகத்திற்கு மானியமாகத் தானம் செய்து செட்டில்மெண்ட் பத்திர மூலம் ரெஜிஸ்டர் செய்துள்ளார்.

அவருடைய விருப்பத்தின்படி மேற்படி நிலங்களின் வருவாயைக்கொண்டு திருவொற்றியூர் தியாகராசப் பெருமான் பிரம்மோத்சவத்தில் பிரதி வருஷம் நடைபெறும் மகிழடி சேர்வை உற்சவ தினத்தில் நமது சங்க சத்திரத்தில் தீர்மோர் தருமம் நடைபெற்று வருகின்றது.

நமது சங்கத்தின் முன்னேற்றத்திற்காக இத்தகைய நன்கொடை அளித்த பு. தங்கவேலு முதலியாருக்கு நம் சங்கத்தார் தங்கள் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைபட்டுள்ளார்கள்.

1933-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் நமது சங்கம் சார்பாகக் கூடிய பொதுக்கூட்டத்தில் திருவொற்றியூரிலுள்ள நமது சத்திரம் மிகவும் பாழடைந்

திருந்ததால் அதைச் சீர்திருத்தும் பொருட்டு திருவாளர் செ. சாரங்கபாணி முதலியார் செ. முத்துசாமி முதலியார், க. வேலாயுத முதலியார், க. துரைசாமி முதலியார், க. சொக்கலிங்க முதலியார், செ. சுப்பிரமணிய முதலியார், அடங்கிய உப நிர்வாகக் கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந் நிர்வாக அங்கத்தினர்கள் நமதுமரபினர் வசிக்கும் கிராமங்களுக்குச் சென்று தொகை வசூலித்து சத்திரத்தைப் புதுப்பிக்கலாயினர். கட்டிடம் பூர்த்தியாவதற்காக சிலர் கையொப்பம் இட்டத் தொகையைக் கொடுக்க மறுத்துவிட்டமையால் கட்டிட வேலையைப் பூர்த்தி செய்வதற்கு முடியவில்லை. ஆகையால் சங்க அங்கத்தினர்கள் அனுமதியின் மேல் மேற்படி வீட்டைச் சங்கத்தார் அடமானம் வைத்து ரூபாய் 400/- வாங்கி சிறிது பாகத்தைப் பூர்த்தி செய்தனர். மேற்படி கடனை தீர்ப்பதற்காக நமது சத்திரத்தை மாதம் ரூபாய் 15/-க்கு வாடகைக்கு விட நேரிட்டது. ஆயினும் உற்சவ காலங்களில் நமது மரபினர் சென்று நீர் மோர் தருமம் செய்வதற்கு மட்டும் நமது சத்திரத்தில் ஒரு அறை நமது வசத்திலிருக்கிறது. சத்திரத்தின் கட்டிடம் இன்னும் பூர்த்தியாகாமல் இருப்பதால் அதைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நமது மரபினரை, தக்க பொருளுதவி செய்யுமாறு நம் சங்கத்தார் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

சத்திரத்தில் தண்ணீர் வசதியின்மையால் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் கரிக்கலவாக்கம். இராஜ¬ மூதலியார் குமாரர் திருவாளர் க. துரைசாமி முதலியார் ரூ. 200/- தான் சொந்தமாக செலவு செய்து மேற்படி சத்திரத்தில் கிணறு எடுத்து வைத்துள்ளார். இத்தகைய பெரும் தொண்டாற்றிய திருவாளர் க. துரைசாமி முதலியார் அவர்

கட்டு நமது சங்கத்தார் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தி நன்றி பாராட்டி வருகின்றனர்.

மேற்படி சங்கக் கட்டிடம் பழுது பார்ப்பதற் காக மணிமங்கலம் கிராமம் ஐயாவு முதலியார் பாரி யாள் அம்மாகண்ணு அம்மையார் ரூ. 100- நன்கொடை அளித்தார்கள். அவருக்கு நம் சங்க அங்கத்தினர்கள் நன்றி பாராட்டக் கடமைபட்டுள் ளார்கள்.

ஆண்டுதோறும் நடைபெறும் திருமயிலாப்பூர் ஸ்ரீ கபாலீஸ்வரர் பிரம்மோற்சவ காலத்தில் சோழிய வேளாள மாபார் ஈசானிய மூலையில் நீர்மோர் தருமத்திற்காக பிரம்ம உற்சவ 2-வது தினம் உப்யத்திற்கு நமது மாமைச் சேர்ந்த அம் மாயி அம்மாள் வைத்த நிதியிலிருந்து கோவிலார் அங்கு பூப்பந்தலும். நீர்மோர் கொடுக்க பந்தலும் போடுகிறார்கள். இச்சங்கம் அங்கு நீர்மோர் தரு மத்தை நடத்தி வந்தார்கள்.

நமது மரபைச் சார்ந்த வியாசர்பாடி. விநாயக முதலியார் அவர்கள் திருமயிலாப்பூர் தென்மாட வீதியில் சித்திரச் சத்திரம் ஒன்று கட்டியுள்ளார். அங்கு ஆண்டுதோறும் பிரம்மோற்சவ காலத்தில் அலங்காரம் செய்து சுவாமிக்கு தீபாராதனை, பிரதி மாதம் துவாதசி தோறும் பிராமண போஜனம், தாகவேட்கை உள்ளவர்கட்கு தண்ணீர் கொடுத்தல் முதலிய தர்மங்களைக் கிரமமாகச் செய்யவும் அதன் வரவு செலவு கணக்குகளைப் பார்க்கவும் நமது மரபில் நால்வரை டிரஸ்டிகளாக நியமனம் செய்து அதிகா ரம் கொடுத்திருந்தார். மேற்படியார் தருமத்தை பரிபாலனம் சரிவர செய்யாமையால் நமது சங்கம் கோர்ட்டாரின் உத்தரவின்படி சங்கத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டு பரிபாலனம் செய்து வருகிறது. (வியாசர்பாடி

விளைக முதலியார் சரித்திரம் சுருக்கம் 16 ஆம் பக்கத்தில் பதிவு செய்துள்ளது).

வெள்ளி விழா :—

தொண்டை மண்டலம் சோழிய வேளாளர் மரபு தர்ம சங்கத்தார் இம்மலரை மிகவும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றார்கள். இச் சங்கம் தோன்றிய நாள் முதல் இன்றைய நாள் வரை வளர்மதி என வளர்ந்து மகிழ்ச்சிக்குரிய வெள்ளி விழா நடக்கும் பருவத்தை அடைந்தமையால் 1943 ஆம் வருடம் ஜூன் மாதம் 20 ஆம் தேதியில் நடந்த பொதுக் கூட்டத்தில் வெள்ளி விழாவை வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்று சங்கத்தின் அங்கத்தினர்கள் தீர்மானித்து, சோழிய வேளாளர் மரபு தர்மசங்கம் வெள்ளி விழா நிர்வாகக் கமிட்டி என்று பெயர் வைத்து கமிட்டியை திருவாளர் ம. தா. நாகபூஷண முதலியார் தலைமையில் ஏற்படுத்தினர்கள். பிறகு நிர்வாக அங்கத்தினர்கள் தைப் பூச நன்னாளில் விழாவை நடத்தும் பொருட்டு துவக்கினர்கள். பல அபிப்பிராயங்களிடையே வெள்ளி விழா வைபவத்திற்கு நமது மரபினரே, தங்களால் இயன்ற பண உதவியைச் செய்ய வேண்டுமென்ற கருத்து வேரூன்றி நாங்கள் ஆக்க வேலையை துவக்கினேம். நமது மரபிற்கும் சங்கத்திற்கும் வெள்ளி விழா ஒரு பாலம் போலாகும். சங்க அபிவிருத்திக்கு வெள்ளி விழா ஒரு ஊன்று கோல். ஆகையால் இவ்விழாவிற்கு பணம் வசூலிக்க நமது மரபினர் வசிக்கும் இடங்களுக்குச் சென்று நிதி சேகரித்தோம். இவ்விழாவின் முதல் வெற்றி, நாங்கள் கேட்டவுடனே மரபார் மனம் உவந்து அளித்த செல்வம்தான் எங்களுக்கும் பல இடங்களில் பேராதரவாக இருந்தது. வெள்ளி

விழா கருத்துக்கள் பல இடத்தில் வரவேற்கப்பட்டன. மிகவும் ஏழ்மை நிலையிலிருப்பவர்கள் கூட நாங்கள் கேட்பதற்கு முன்பே அவர்களால் இயன்ற சிறு உதவியை அளித்தது எங்களுக்கு மிகவும் ஊக்கம் அளித்தது. மற்றும் இவ்விழாவிற்குப் பலரும் பண உதவி மட்டுமன்றி, மேலும் பல வகை உதவிகளும் செய்வதாக வாக்களித்தார்கள். அவர்களுக்கு சங்கம் சார்பாக மனமுவந்த நன்றி பாராட்டத் தக்கது.

நமது மரபின் தற்கால நிலைமையைப் பலவகையிலும் அபிவிருத்தி செய்யவேண்டும். நமது மரபினர் அனைவரும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையின் கீழ் வருகிறார்கள். இது போன்ற ஒரு சமூக முன்னேற்றத்திற்கு சங்கம் தான் தக்க சாதனம். நம்மை ஒருவருக்கொருவர் நன்றாக அறிமுகப்படுத்திக்கொள்ள இது போன்ற பொது விழாக்களே காரணங்களாகும். நாம் மேலும் ஒற்றுமையுடனும் தீவிரமாகவும் கல்லொழுக்கத்துடனும் முன்னேற்ற மடைய வேண்டும். (கல்லொழுக்கம் என்ற வியாசம் ஒன்றை நமது மரபைச் சார்ந்த காலம்சென்ற எட்டியாபுரம் சமஸ்தான்வித்வான் கவிராயர் வியாசர்பாடி. சுந்தர முதலியார் இயற்றியுள்ளார்.) நாம் ஒருவருக்கொருவர் அன்பினால் கட்டுப்பட வேண்டும். நமக்கு அதிர்ஷ்ட வசமாக நமது பெரியோர்களின் ஆசார விதி இருப்பது மிகவும் போற்றத்தக்கது. அது நமது அபிவிருத்திக்கும், நாம் நம்முடைய பின் சந்ததியார்களின் தூய வாழ்விற்கும் வழிகாட்டும் நூலாகும். மேலும் நாம் விருத்தியடைய வேண்டியது கல்வியின் மூலம்தான். நமது சந்ததியார்களுக்குக் கல்விச் செல்வத்தை அளிக்கவேண்டும். 'கல்வியே கருந்தனம்', 'கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு' என்ற பழமொழிகள் கல்வியின் பெருமையை

தெரிவிக்கின்றன. கல்வியின் மூலம் ஒரு சமூகம், கட்டாயம் உச்சநிலை அடையும். கல்வி அபிவிருத்திக்குத் தக்க பணம் தேவை. நமது சங்கத்திற்குப் பலர் பண உதவி செய்தால் நமது மரபின் பிள்ளைகள் படிக்கலாம். இதற்கு பண நிலைமை ஒருவாறு உச்ச நிலைக்கு வர நமது மரபில் நபருக்கு வருஷம் ரூபாய் 1/- கல்விக் கட்டணம் என்று செலுத்துவோமாகில் நமது எண்ணம் முன்னேறும். பிறகு கட்டாயக் கல்வியை நமது மரபின் பிள்ளைகளுக்கு இச்சங்கம் அளிக்க முன்வரும். கல்வியினால் கான் தற்கால நாகரீக விவசாயத்தை விருத்தி செய்யலாம். நமது சந்ததிகளுக்கும் நன்மையாகவும் மிருக்கும். ஆகையால் கல்வியின் அவசியம் இதனால் நன்கு விளங்குகிறது. ஆகையால் இச்சங்கம் எடுத்துக் கொண்ட குறிக்கோள் என்னவென்றால், திருமயிலையிலோ, அல்லது திருவொற்றியூரிலோ நமது மரபுப் பிள்ளைகள் படிப்பதற்காக பள்ளிக்கூடமும், தங்க வசதியும், உண்ண உணவும், மற்றும் பல வசதிகளையும் ஏற்படுத்தி அவர்களை சங்கத்தின் சொந்தப் பார்வையில் வைத்திருக்க வேண்டும் என்பதாம். இதை வெற்றிகரமாக நடத்துவதற்கு நமது கிராமங்களிலுள்ள பொது மான்யங்களையும், மரபாரால் இயன்றிய சிறு அளவு பொருளாதாரமும், வைப்பார்களானால் அவ்வருவாயைக் கொண்டு மேற்படி நோக்கத்தை சிறிதளவும் சந்தேகமில்லாமல் நிறைவேற்றலாம்.

இவற்றை எல்லாம் நன்குணர்ந்து நமது சோழிய வேளாள மரபு மேன்மேலும் முன்னேற்றம் அடைந்து பெருமை அடைவதற்கான வழிகளில் ஒன்றாய் நின்று வருமாறு நாங்கள் மூழு மனதுடன் நமது மரபினரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

சங்கத்தின் முன்னாள் நிர்வாக அங்கத்தினர்கள்

முன்னாள் அக்கிராசனதிபதி

திருவாளர்.	ம. மகாதேவ முதலியார்	—	1915-16
,,	க. சுப்பராய முதலியார்	—	1916-18
,,	க சொக்கலிங்க முதலியார்	—	1918-21
,,	செ. முத்துசாமி முதலியார்	—	1921-31
,,	வி. சண்முகசுந்தர முதலியார்	—	1931-32
,,	வெ. தங்கவேலு முதலியார்	—	1932-33
,,	க. துரைசாமி முதலியார்	—	1933-40
,,	க. வேலாயுத முதலியார்	—	1940-47
,,	க. துரைசாமி முதலியார்	—	1947

முன்னாள் உப அக்கிராசனதிபதி

திருவாளர்.	வெ. தங்கவேலு முதலியார்	—	1915-21
,,	க. சொக்கலிங்க முதலியார்	—	1921-22
,,	க. வேலாயுத முதலியார்	—	1922-41
,,	க. துரைசாமி முதலியார்	—	1941-47
,,	செ. சுப்பிரமணிய முதலியார்	—	1947

முன்னாள் காரியதரிசி

திருவாளர்.	க. வேலாயுத முதலியார்	—	1915-17
,,	க. சின்னகண்ணு முதலியார்	—	1917-18
,,	பு. தங்கவேலு முதலியார்	—	1918-22
,,	க. சொக்கலிங்க முதலியார்	—	1922-27
,,	பு. தங்கவேலு முதலியார்	—	1928-30
,,	க. சொக்கலிங்க முதலியார்	—	1930-31
,,	செ. சாரங்கபாணி முதலியார்	—	1931-47
,,	செ. சண்முகசுந்தர முதலியார் B.A.		1947

முன்னாள் பொக்கிஷதார்

திருவாளர்.	செ. சுப்பிரமணிய முதலியார்	—	1915-16
,,	ம. மகாதேவ முதலியார்	—	1916-17
,,	செ. சுப்பிரமணிய முதலியார்	—	1917-18
,,	க. துரைசாமி முதலியார்	—	1918-27
,,	க. சொக்கலிங்க முதலியார்	—	1927-30
,,	க. கலியாணசுந்தர முதலியார்	—	1930-31
,,	ம. திருநாவுக்கரசு முதலியார்	—	1931-32
,,	க. பஞ்சாபிகேசு முதலியார்	—	1932-41
,,	க. சிவராம முதலியார்	—	1941-47
,,	க. சுந்தரராஜ முதலியார்	—	1947

வியாசர்பாடி விஜயக முதலியார் தரும வரலாறு

தொண்டை மண்டலம் சோழிய வேளாளர் மரபிலே திருவடியார் கோத்திரத்தில் ருத்ரோத்காரி ஆண்டு ஐப்பசி மாதம் பன்னிரண்டாம் தேதி (1803 அக்டோபர்) அர்ஜுன முதலியாருக்கும் நாகரத்தினம்மாளுக்கும் வியாசர்பாடி விநாயக முதலியார் தோன்றினர். அவர் சிறு வயதிலேயே தமிழ்ப் பற்று உடையவராய் விளங்கினர். அன்னர் தம் முடைய 22-ம் வயதில் குடும்பத் தலைவனாகி, திருவல்லிக்கேணியில் இருந்த தேசிங்கு என்பவரிடத்தில் வேலைக்கு அமர்ந்து அவருடைய உத்திரவின் பேரில் நவாபு அரண்மனைக்கு வேண்டிய பொருள்கள் அனுப்புவதிலும் பணம் வசூல் செய்வதிலும் மிகவும் திறமையாக வேலை செய்து நவாபின் நன்மதிப்புப் பெற்றார். நவாபு இடத்தில் மராமத்து இலாகா முக்கிய துரை கான்ஸ் என்னும் ஐரோப்பியர் விநாயக முதலியாரின் திறமையைக் கண்டு வியந்து, தன் கீழ் உத்தியோகம் செய்யும்படி வேண்டிக்கொண்டனர். முதலியார் துரையினுடைய வேலைகளை மிக ஜாக்கிரதையாகப் பார்த்து வந்ததுடன் வேலைகளை யுக்தியாயும், பிளான்களை அழகாய் எழுதுவதிலும், எஸ்டிமேட்டுகளைச் சரியாக போடுவதிலும் நிபுணராய் இருந்தார். பிறகு துரை அவர்கள் மிக சந்தோஷப்பட்டு முதலியாரை தன் பாகஸ்தராக ஏற்படுத்திக்கொண்டு தன் இலாபத்தில் மூன்றில் ஒரு பங்கு கொடுப்பதாக வாக்களித்தார். கான்ஸ் துரை இறந்த பிறகு நவாபின் மராமத்து இலாகா வேலைகள் இவரிடம் வந்தது. இவர் தோன்றி திருவல்லிக்கேணி, மீர்சாகிப்

பேட்டை, சேப்பாக்கம், மயிலாப்பூர் முதலிய இடங்களில் நவாப்புக்குச் சொந்தமான கட்டிடங்களை காண்போர் கண்கள் கவரும்படி மிக அழகாகக் கட்டி முடித்தார். நவாபு இதற்கு மிக சந்தோஷப் பட்டு முதலியாருக்கு சன்மானங்கள் பல வழங்கினர். முதலியாருக்கும் அவர் மனைவிக்கும் உபகார சளம்பளமும் கொடுத்தார்.

வி. விநாயக முதலியார் தான் சேகரித்து வைத்த திரவியங்களை தரும வழியில் செலவிட வேண்டும் என்று நல்லெண்ணம் கொண்டு, தன்னுடைய சொத்துக்களில் சிலவற்றை தருமத்திற்காக வைத்திருக்கிறார். இவர் பெரிய கொடையாளியாக விளங்கினர். தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தார். இவருடைய கொடைத் திறமையை திரிசிபுரம் மகா வித்வானகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தான் இயற்றிய "வியாசக் கோவை," என்னும் நூலில் விநாயக பூபதியின் வள்ளல் தன்மையை மிக அழகாக எடுத்துரைத்திருக்கிறார். ஒரு மலரின் வாசனையால் பல இடங்களில் இருக்கும் வண்டுகள் அம்மலரிடம் வந்து தேனை உண்டு போவது போல் வி. விநாயக முதலியாருடைய கொடைத் திறமையை தூக்கிக்கொண்டு காற்றானது தமிழ்ப் புலவரிடம் தூது சொல்ல தமிழ்ப் புலவர்கள் முதலியாரை அணுகி பரிசில் பெற்று போந்தனர் என்று அழகாக எழுதி யிருக்கிறார்.

வி. விநாயக முதலியார் தான் வைத்திருக்கும் தரும பரிபாலனத்தை நடத்துவதற்காக மயிலாப்பூர் தென்னண்டை மாடவீதியில் 21 எண்ணுள்ள ஒரு சத்திரமும், ஸைலபஜார் கடைத்தெருவில் இரண்டு கடையும் நுங்கம்பாக்கத்தில் சர்வே நெ. 190 விஸ் தீரணம் ஆறு காணி பதினைந்து மனை 1298 சதுர

அடி உள்ள தோட்டங்களும் வைத்திருந்தார். அவர் அக்கால மனப்பான்மைக்கு ஏற்றவாறு பிரதி துவாதசிக்கும் பிராமண போஜனமும், மயிலாப்பூர் உற்சவத்தின் பொழுது சித்திர சத்திரத்தை அலங்கரிக்கவும் சுவாமி வீதிவலம் வரும்பொழுது தீபாராதனை செய்யவும் ஏற்பாடு செய்திருந்தார். தான் இறந்த பிறகு தன்னுடைய சந்ததியார்கள் தான் ஏற்படுத்திய தரும விவகாரங்களை கவனிக்க வேண்டும் என்றும், அப்படி அவர்கள் கவனிக்காவிட்டால், மரபார் அக்கரை கொண்டு கவனிக்க வேண்டும் என்றும் தன்னுடைய உயிலில் செப்பி இருக்கிறார். வி. விநாயக முதலியார் இறந்த பிறகு அவர் மூத்த குமாரன் சோமசுந்தர முதலியாரும், அவருடைய மருமகப் பிள்ளையான திருவேங்கட முதலியாரும் பரிபாலித்து வந்தார்கள். அப்பொழுது வி. விநாயக முதலியாரின்மற்ற இருபிள்ளைகளான வி.கெங்காதர முதலியாரும் வி. ஞானசிகாமணி முதலியாரும் பாலியர்களாக இருந்து வந்தார்கள். சில வருடங்கள் கழித்து வி. கெங்காதர முதலியார் நமது மரபு பெரிய தனகாரர்களான மகாதேவ முதலியாருக்கும், வெ. தங்கவேலு முதலியாருக்கும் தன்னுடைய தமையனர், வி. சோமசுந்தர முதலியார் தரும பரிபாலனங்களை சரிவர நடத்துவதில்லை என்று அடிக்கடி அவர் கொடுத்த மனுக்களின் பேரில் 1916-ம் வருடம் ஜூலை மாதம் 1-ந் தேதியன்று திருவொற்றியூரில் நடந்த மகாநாட்டில், இந்த விஷயங்களை கவனித்து தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி 12 பேர் அடங்கிய கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது.

இதற்குள்ளாக நமது சங்கம் 1915-ம் ஆண்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. நமது மரபை சார்ந்த கவிராயர் வி. சுந்தர முதலியார் (வி. விநாயக முதலி

யாரின் தமையனுர் மகன்) கமது சங்க யாதாஸ்து விதி 11—(2)-ல் உள்ளபடி தரும பரிபாலனத்தை ஏற்று நடத்த வேண்டுமென்றும் ஆசைப்பட்டார். அப் பொழுது 1916-ம் வருடம் மகாகாட்டில் நியமிக் கப்பட்ட கமிட்டி தன்னுடைய ஆக்க வேலையை துவக்கிற்று. அ தில் கரிக்கலவாக்கம் சொக்க லிங்க முதலியாரும், சென்றம்பாக்கம் முத்துசாமி முதலியாரும் வாதிகளாகவும், வி. சோம சுந்தர முதலியார், வி. கங்காதர முதலியார், வி. ஞான சிகாமணி முதலியார் பிரதிவாதிகளாகவும் நின்று வழக்கு தொடர்ந்தார்கள். சோமசுந்தர முதலி யார், அவருடைய தகப்பனுர் வியாசர்பாடி விநாயக முதலியார் இயற்றியபடி தரும பரிபாலனங்களை சரி யாக நடத்தவில்லை என்று வாதிகள் குற்றம் சாட்டி னர்கள். அது சென்னை உயர்த்ர நீதி மன்றத்தில் 1918-ம் வருஷத்திய 87 வெ. வியாஜ்ஜியமாக நடந்து வந்தது. க. சொக்கலிங்க முதலியாரும், செ. முத்துசாமி முதலியாரும் போட்ட பிராதை அட்வ கெட் ஜனரலால் ஆமோதிக்கப்பட்டு, இந்த தரும பரிபாலன நிர்வாகத்திற்கு ஒரு புது ஸ்கீம் திட்டம் போட கோர்ட்டுக்கு தன்னுடைய சிபாரிசுடன் அனுப்பினர். கோர்ட்டார் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளும் தருணத்தில் ஒற்றுமையும் சமாதான மும் சிறந்தது என்ற கொள்கைப்படி வாதி பிரதி வாதிகள் ராஜியாக போய்விட்டார்கள். அவர்க ளுக்குள் கலந்து தரும பரிபாலனத்தை நடத்துவ தற்காக சில விதிகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். இவர்கள் ராஜியாகப் போவது தருமத்திற்கு கேடு விளைவிக்கும் என்று கரிக்கலவாக்கம் வேலாயுத முதலியாரும், ஆயல்சேரி தங்கவேலு முதலியாரும், அதை ஆட்சேபித்து கோர்ட்டில் மனுதாக்கல் செய்தார்கள். மேன்மை பொருந்திய நீதிபதி

கூட்ஸ்டிராட்டர் அவர்கள் 1918-ம் ஆண்டு தன்னுடைய தீர்ப்பில் வி. விநாயக முதலியாரால் ஏற்படுத்தப்பட்ட தருமத்தை பரிபாலனம் செய்ய ஒரு திட்டம் தயாரித்து கொடுத்தார். அதில் முக்கியமாக நமது சங்கத்திலிருந்து வருடா வருடம் 6 பேர் மேற்படி தரும பரிபாலன நிர்வாகத்திற்கு தேர்ந்து எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்த திட்டம், சில வருடம்தான் அமுலில் இருந்தது. பிறகு 1928 வருஷம் அலமாதி சாமிநாத முதலியாரும், வெள்ளிவாயல் சின்னப்ப முதலியாரும் சேர்ந்து இந்த திட்டம் சரியாக நடப்பதில்லை என்று கோர்ட்டாருக்கு மனுவு செய்ததின் பேரில் கோர்ட்டார் சங்கத்திலிருந்து மூன்று வருடத்திற்கு ஒரு தடவை மேற்படி வி. விநாயக முதலியார் தரும பரிபாலனத்திற்கு சங்க பொதுக் கூட்டத்திலிருந்து நான்கு அங்கத்தினரை நியமனம் செய்ய வேண்டுமென்று புதிய திட்டம் வந்தது. வி. விநாயக முதலியாரின் சந்ததியாரில் ஒருவரும் ஐந்து வருடத்திற்கு ஒரு தடவை சந்ததியார்களாலே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் தீர்ப்பு ஆயிற்று.

அதன் பிரகாரம் கோர்ட்டாரால் 1932 டிசம்பர் வரை அடியில்கண்ட ம-ரா-ரா-ஸ்ரீ செ. முத்துசாமி முதலியார் க. வேலாயுத முதலியார் வி. கெங்காதர முதலியார் க. துரைசாமி முதலியார் க. சொக்கலிங்க முதலியார் இவர்களை தேர்ந்து அனுப்பப்பட்டார்கள். 1933-ல் கோர்ட்டு உத்திரவின்படி க. வேலாயுத முதலியார், வி. ஷண்முகசுந்தர முதலியார், அ. கோவிந்தசாமி முதலியார், வே. மாணிக்கவேலு முதலியார் சங்கத்தில் இருந்தும் வேறு சந்ததியாருக்கு அனுப்பிய 9 பேலட் பேப்பரில் மூன்று திரும்பி வந்ததில் ஒன்று வி. திருஞாவுக்கரசு முதலியாருக்கும்

ஒன்று வி. கோவிந்தசாமி முதலியாருக்கும் ஒன்று தஸ்ஸுபடியாகிவிட்டது. ஷை திருநாவுக்கரசு முதலியார் 7-1-33-ல் இறந்துவிட்டதால் ஷை வி. கோவிந்தசாமி முதலியார் தேர்ந்து அனுப்பப்பட்டார். 8-5-33-ல் ஷை வி. ஷண்முகசுந்தர முதலியார் ராஜினமா செய்துவிட்டபடியால் அவர் ஸ்தானத்திற்கு ம. அருணாசல முதலியார் ஷை சங்கத்தாரால் அனுப்பப்பட்டார்.

இந்த விதிப்படி இன்றுவரை சங்கம் மூல்யமாக வி. விநாயக முதலியார் தர்மங்களின் நிர்வாகம் நடந்துக்கொண்டு வருகிறது. பல இடையூறுகளினின்று அவ்வப்போது இந்த தரும பரிபாலனம் வெற்றிகரமாக கோர்ட்டார் விருப்பம்படி நடத்தப்பட்டு வருகிறது. நுங்கம்பாக்கம் தோட்டம் கனம் நீதிபதி வாட்ஸ்வர்த் உத்தரவுபடி மனைகளாகப் பிரிக்கப்பட்டு, விநாயகபுரம் என்று வழங்கிவருகிறது. விநாயகபுரத்தில், இந்த தருமத்திற்கு உழைத்த பெரியோர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் பெயரையே தெருவிற்களுக்கு வழங்கப்பட்டது. கோர்ட்டு உத்தரவு பெற்று வீதி, ஜலதாரை முதலிய நற்பணிகள் செய்யப்பட்டன. மற்றும் எவ்வளவோ அபிவிருத்திகள் செய்யவேண்டியிருக்கிறது. நிர்வாகம் நன்முக நடக்கிறதென்றும் கனம் அட்வகேட் ஜனரல் திருவாளர் K. ராஜா ஐயர் அவர்கள் 14-4-49-ல் தீர்ப்பு கூறி இருக்கிறார்.

கரிக்கலவாக்கம் சுப்பராய முதலியார்

இவர் காலஞ்சென்ற டிப்டி கலெக்டர் கந்த சாமி முதலியாரின் மூத்த புதல்வர். சுப்பராய முதலி யார் 12-9-1863-ல் பிறந்தவர். இவர் ஒரு பெரிய அறிவாளி. இவரை நமது மரபின் "சாக்ரடிஸ்" எனலாம். இவர் சென்னை அரசாங்கத்தில் ஆக்டிங் தாசில்தாராகவும் இருந்தார். கார்டன் போன்ற ஆங்கிலேயர்கள் பலர் இவர் நாவண்மையைக் கண்டு வியந்தார்கள் என்றால், இவருடைய பேச்சுத் திறமையை நம்மால் விவரிக்கமுடியாது. "முயற்சி யுடையோர் இகழ்ச்சி யடையார்" என்ற மூதுமொழி யில் அதிகப்பற்றுக் கொண்டவர். இப் பெரியார் சென்னை நகர சபையில் பெத்துநாய்க்கன் பேட் டைக்கு பிரதிநிதியாக சிலகாலம் இருந்து தொண்டு செய்தார். இவர் கல்விப் பிரியர். சென்னை புரோக்ர சிவ் யூனியன் உயர்நிலைப்பள்ளியின் கட்டடத் துக்கு கடைக்கால் நாட்டிய பெருமை இவரைச் சாரும். இப் புனிதரால் துவக்கப்பெற்ற பள்ளி, இன்று உயர்தரப் பள்ளியாக விளங்குகிறது. இப் பள்ளிக்கு இவர் செய்த தொண்டுக்கு நன்றி செலுத் தும் வண்ணம் மை பள்ளிக்கூட மண்டபத்தில் இவ ரது உருவப்படம் வைக்கப்பட் டிருக்கிறது. இவர் தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்தரப் பள்ளியில் உறுப்பினராக சிலகாலம் இருந்து வந் தார். இவர் மயிலாப்பூர் பண்டாபிசிலும், சென்னை இந்து குட் டெம்பளார் லீக்கிலும் இருந்து சேவை செய்து வந்தார். நமது மரபினரின் தர்ம சொத் துக்களை பரிபாலனம் செய்ய, சோழிய வேளாளர் மரபு தர்ம சங்கத்தை நிறுவகம் செய்தவர் இவர் தான். இந்த பெரு முயற்சிக்காக சங்கம் அவர்பால்

என்றும் கடமைப் பட்டிருக்கிறது. இங்ஙனம் சங்கத்தின் உயர்வையும் அதன் மூலம் நமது மரபின் உயர்வையும் பெருக்க கருதி அல்லும் பகலும், அதற்காக சுய நலம் கருதாமல் உழைத்த உத்தமர். முயற்சி திரு வினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்' என்ற முதுமொழியை உன்னி, நமது மரபார் முன்னேற்றத்திற்கும் மற்றும் பல நன்மைக்காகவும், நமது வித்தியாசங்களை மறந்து, பாடுபடுவதுதான் நாம் இந்த பெருந்தகைக்குச் செய்யும் தொண்டாகும். இவர் 23-7-1934-ல் இயற்கை எய்தினர்.

எட்டியாபுரம் சமஸ்தான வித்வான் கவிராயர் வியாசர்பாடி சுந்தர முதலியார்

இவர் திருமயிலையில் தென்னண்டை மாடவீதியில் உள்ள சித்திரச் சத்திரம் கட்டி உதவிய வள்ளல் வியாசர்பாடி விநாயக முதலியார் தம்பி அப்பாசாமி முதலியார் குமாரர். திரு ஆவடுதுறை ஆதினத்து மஹா வித்வான் — மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் அச்சத்திரத்தின் பெருமையைப் பாராட்டிச் சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலையும், வள்ளல் விநாயக முதலியார்மீது வியாசக் கோவையும் பாடினர். சுந்தர முதலியார் திருவள்ளுவ நாயனர் சங்கிதியில் தொண்டு செய்தவர். திருக்குறளுக்குக் கருத்துரை எழுதி வெளியிட்டவர். இவர் நாவண்ணமை மிக்கவர். மேலும்சிவநாம சங்கீர்த்தனம், திருத்தொண்ட புராண வசனம், சைவ தூஷண பரிகாரம், மாத ரொழுக்க இலக்கணம் என்னும் வசன நூல்

களை எழுதினர். ஒர் நாள் சுந்தர முதலியார், சோமசுந்தர முதலியார் என்பவரை காலை 5 மணிக்குப் பார்க்கப் போனர். சோம சுந்தர முதலியார் துணியால் முகத்தை மூடிக் தூங்கிக்கொண்டு இருந்தார். வி. சுந்தர முதலியார் அவரை எழுந்திரும்படி கூப்பிட்டார். சோமசுந்தரம் "யாரது?" என்று கேட்டார். அதற்குக் கவிராயர், "சோமனை நீக்கிப் பார்" என்றாராம் அதன் பொருளாவது சோமசுந்தரம் என்னும் வார்த்தையை "சோமன்" என்பதை எடுத்துவிட்டால் தனியாய் விடுகிறது. ஆகையால் வந்திருக்கிறவர் சுந்தரம் என்ற பெயருடையவர் வந்திருக்கிறார் என்று ஆகிறது. மற்றொரு பொருள் என்ன வெனில் "சோமன்" என்பது போர்வை என்ற பொருள்படும். முகத்தில் இருக்கும் போர்வையை எடுத்துவிட்டால் வந்திருக்கிறவர் தெரியும் என்பதாகும். இவ்விதமாக இரு பொருள் பட பேசுவதில் வல்லவர் அவர். பழைய வித்வான்களிடம் பழகியவர். எட்டியாபுரம் ராஜா அவர்களிடமிருந்து "எட்டியாபுரம் சமஸ்தான வித்வான் என்ற பட்டம் இவர் பெற்றபோது சென்னைப் புலவர்களும் தென்னாட்டிலிருந்த புலவர்கள் பலரும் பாக்களும் நற்சாட்சி பத்திரங்களும் கொடுத்து இவரைச் சிறப்பித்தனர். இவர் நமது மரபின் நாட்டார் பதவியை அனேககாலம் வகித்து வந்தார். நமது ஆசார சட்ட விதிகளின் திட்டங்களை இயற்றிய பெருமை இவரைச் சார்ந்ததாகும். இவர் கல்விக் கொடையில் சிறந்த காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் சரித்திரத்தை வரிசையாக எழுதியிருக்கிறார். நம் மரபினருள் 'இந்து ஜன பூஷணி' என்ற பத்திரிகையை நடத்தின பத்திராதிபர். இவர் எழுபத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்து 1918-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சென்னையில் சமாதி அடைந்தனர்.

———

மறைந்த ரத்தின சபாபதி முதலியார்.

க. கோவிந்தசாமி முதலியார்
தலைவர்
தொழிலாளர் முன்னேற்றத்
திற்கு பாடுபடுபவர்

புதுவை தங்கவேலு முதலியார்

புதுவை - தங்கவேலு முதலியார் உழைப்பே உருவெடுத்தவர். இவர் சங்கத்திற்காக அனேக பாடுபட்டு, தன்னலம் கருதாமல், அதன் முன்னேற்றத்திற்காக தன்னால் இயன்ற பேருதவியைச் செய்தார். அப்பெருந்தகை வெள்ளிவாயல் கிராமத்தில் தனக்குச் சொந்தமான ஒரு நிலத்தை சங்கத்தின் தருமத்திற்காக எழுதிவைத்தார். அதன் வரும்படியைக் கொண்டு திருவொற்றியூரில் பிரம்மோற்சவத்தில் வருடா வருடம் கடக்கும் நீர்மோர் தருமத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சாதனம் எழுதி யிருக்கிறார். இவர் கொஞ்சகாலம் வி. விகாயக முதலியார் தரும பரிபாலன சபையின் அங்கத்தினராக இருந்து பணி புரிந்தார்.

சென்றம்பாக்கம் முத்துசாமி முதலியார்

இவர் சென்றம்பாக்கம் குமரவேலு முதலியாரின் குமாரர். நமது சங்கம் தோன்றின நாள் முதல் அதனுடைய நிறுவகத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு, அதன் முன்னேற்றத்திற்காக, அதி தீவிரமாக உழைத்த பெருமை இவருக்கு உரியதாகும். இவர் காலஞ்சென்ற கரிக்கலவாக்கம் சுப்பராய முதலியாரின் வலக்கையாக இருந்து சீர்கேடில் இருந்த வியாசர்பாடி வி. விகாயக முதலியார் தரும பரிபாலனத்தை ஹைகோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடர்ந்து மீட்டு தருமத்தை சங்கத்தின் சொந்த பார்வையின் கீழ் வரும்படிச் செய்தார்.

ஷை தரும பரிபாலனத்தில் அனேக ஆண்டுகள் ஒழுங்காக நடத்திவந்தார். அவர் செய்த சேவைக்கு சங்கம் நன்றி உறியதாகும். இவர் கல்வி அபிவிருத்தியிலேயும் மிகப் பற்றுடையவர். சென்னை புரோக்ரசிவ் யூனியன் உயர்நிலைப்பள்ளியில் காரிய தரிசியாக இருந்து பலகாலம் பணி புரிந்திருக்கிறார். ஆங்கிலத்தில் மிக அழகாகப் பேசும் ஆற்றல் உடையவர். இவர் நிதி ஒன்றை ஷை பள்ளியின் பிள்ளைகளுக்கு பரிசளிக்க, அன்பளிப்பாக வைத்திருக்கின்றார்.

"இன்ன செய்தாரை ஒருத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்பது இவரது குறிக்கோள். நுங்கம்பாக்கம் விநாயக புரத்தில் இவர் பெயரை ஒரு வீதிக்கு இட்டு வழங்கப் பட்டு வருகிறது.

கரிக்கலவாக்கம் சொக்கலிங்க முதலியார்

கரிக்கலவாக்கம் கிருஷ்ணசாமி முதலியாரின் குமாரர் நமது சங்கத்தில் பல ஆண்டுகள் காரியதரிசியாக இருந்து அரிய சேவையும், சிறந்த தொண்டும் செய்தார். இவர் நமது மரபிற்கு, சென்னைப்பட்டணத்தின் பெரிய தனக்காரராக இருந்து மரபினரை சீர்திருத்தி வந்தார். "முயற்சி திருவினையாக்கும்" என்பது இவரது குறிக்கோள்.

செ. முத்துசாமி முதலியாருடன் மற்றொரு வாதியாக இருந்து, வி. விநாயக முதலியார் தரும பரிபாலனத்தை சங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வந்தார். ஷை தரும பரிபாலனத்தில் பல ஆண்டு

க்ள் இவர் டிரஸ்டியாக இருந்து பணி புரிந்திருக் கிறார். இவருடைய உயரிய பண்புக்காக, இச்சங் கம் இவருக்கு என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளது. நுங்கம்பாக்கம் விநாயகபுரத்தில் ஒரு வீதிக்கு இவர் பெயர் வைத்து வழங்கப்பட்டு வருகிறது.

கரிக்கலவாக்கம் வேலாயுத முதலியார்

இவர் டிப்டி கலெக்டர் க. கந்தசாமி முதலி யாரின் இரண்டாவது புதல்வர். இவர் தாம் நினைத்த எந்த செயலையும் முடிக்கும் திறமையுடையவர். இவர் நமது சங்கத்தில் முதல் காரியதரிசியாக அங் கம் வகித்தார். வியாசர்பாடி விநாயக முதலியார் தரும பரிபாலனத்தில் அதிக ஊக்கத்துடன் இன்னல் களுக்கிடையே தொண்டுகள் பல புரிந்திருக்கிறார். சென்னை நகர வாசிகளின் நன்மையைக் கருதி 30 வருடங்கள் தம் கருத்துக்களை அரசாங்கத்தினருக்கு அறிவித்து, 1939-ம் ஆண்டில் பூண்டி நீர்தேக்க திட் டத்தின் யோசனையைக் கூறியவர் இவரே. அரசாங் கம் இதனை அங்கீகாரம் செய்தது. இப்பொழுது சென்னையின் ஜலவசதிக்காக கிருஷ்ணா, பெண்ணார் நதி ஜலத்தை நமது செங்கற்பட்டு, நெல்லூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு, சித்தூர், கடப்பை ஜில்லாக்களுக்கு கொண்டுவர யோசனை கூறி வரு நிட்டம் அமுலில் இருக்கிறது. இதனால், இவரின் பொதுநலச் சேவை நன்றாக விளங்குகிறது.

கரிக்கலவாக்கம் துரைசாமி முதலியார்

இவர் கரிக்கலவாக்கம் இராஜா முதலியார் குமாரர். தற்பொழுது சங்கத்தில் தலைமைத் தாங்கி நடத்துகிறார். இவர் சங்கத்தில் பல ஆண்டுகள், சலியா உழைப்புடன் நிர்வாகப் பொருப்பேற்று, தொண்டு செய்து வருகிறார். 'அறஞ்செய விரும்பு'' என்ற இவரது இயற்கை குணத்துடன் திருவொற்றியூரிலுள்ள சங்க சத்சத்திரத்தில் கிணறு எடுப்பதற்காக ரூ. 200/- கன் கொடை அளித்ததினால், இவருடைய தரும சிந்தனையும், தயாள குணமும் தெரிகின்றது. இவர் சில காலம் வியாசர்பாடி விநாயக முதலியார் தரும பரிபாலனத்தின் டிரஸ்டியாக இருந்து பாடுபட்டவர். சங்க முன்னேற்றத்துக்காக உழைத்ததற்கு சங்கம் இவருக்கு நன்றி செலுத்தக் கடவதாகவும். நுங்கம்பாக்கம் விநாயகபுரத்தில் ஒரு வீதிக்கு இவர் பெயர் வைத்து வழங்கப்பட்டு வருகிறது.

வெள்ளிவாயல் தங்கவேலு முதலியார்

இவர் வெள்ளிவாயல் செல்லப்ப முதலியார் குமாரர் 14-8-1874-ல் பிறந்தார். இளம் வயதிலேயே கல்வியில் திறமை உடையவராய் இருந்தமையால், சென்றம்பாக்கம் சிவசங்கர முதலியாரால் சென்னைக்கு கொண்டுவரப்பட்டு, கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டார். ஓரியண்டல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியில் 20 வருஷங்கள் வரை உத்தியோகம் செய்து 10 வருடங்கள் பென்ஷனும் பெற்றார்.

இவர் சோழிய வேளாள மரபின் நாட்டார்க் இருந்து, மரபினரை ஒழுங்காக நடத்தி வந்தார். சோழிய வேளாள மரபின் தரும சங்கத்தின் விருத்தி யைக் கோரி அதிகமாக உழைத்தார்.

வெள்ளிவாயல் மாணிக்கவேலு முதலியார்

இவர் குமரவேலு முதலியாரின் புதல்வர். திருமயிலைக்கும் சென்னைக்கும் பெரியதனக்காரராக இருந்து மரபினரை சீர்திருத்தி பணி பல புரிந்திருக் கிறார். வியாசர்பாடி விநாயக முதலியார் தரும பரி பாலனை சபையில் ஓர் அங்கத்தினராகவும் இருந்து வேலை செய்தார். நமது சோழிய வேளாளர்கள் திரு மயிலாப்பூரிலும் திருவொற்றியூரிலும் தருமத்தில் பிரசுத்தி பெறவேண்டும் என்பது இவரது விருப்பம்.

மயிலை இரத்தினசபாபதி முதலியார்

இவர் கிருஷ்ணசாமி முதலியாரின் மூன்றாவது புதல்வராய் 1880-ல் இவர் பிறந்தவர். இவர் காங் கிரஸ் அங்கத்தினராக இருந்து தேசசத்திற்கு மாபெரும்தொண்டு செய்தவர். கடல் மடை திறந்தார் போல் பேசக்கூடிய ஆற்றல் பொருந்தியவர். இவர் பேச்சில் அழகிய உவமைகள் ததும்பும் ஓவ்வொன்றையும் உதாரணத்தோடு விளக்கும் தன்மைப் படைத்தவர். இவர் உடலில் சுதந்திர தியாகம் ஊன்றி பழுத்திருந்தது. தற்சமயம், மரா மத்து இலாகா மந்திரி கனம் பக்தவச்சல முதலி யாருக்கு நெருங்கிய பிரியாவிடை போன்ற கண்பர்.

இவருடைய தேசத் தொண்டைப்பற்றி, அவர் காலமானவுடன் "பாரத தேவி." "சுதேசமித்திரன்'. முதலிய பத்திரிகைகள் புகழ் மாலை சூட்டின. இவர் தேசத் தொண்டிலேயே அல்லும் பகலும் உழைத்தார். நமது மரபு முன்னேற, எல்லோரும் கல்வி கற்க வேண்டு மென்று விரும்பினர். இவர் இறக்கும் தருவாயில்கூட நம் சமூகம் முன்னேற்றம் அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டார். இவர் தம் வாழ்நாள் முழுதும் பிரம்மசாரியாகவே கழித்தார். கடைசியாக சேலம் இராம கிருஷ்ண ஹோமில் பிரசங்கம் செய்துக்கொண்டிருக்கும்போது மயக்கமுற்று விழுந்தார். அதன் காரணமாக நோய்வாய்ப்பட்டு, 65-ம் வயதில் விண்ணுலகம் எய்தினர். இவர் மறைவு நமது மரபினருக்குமன்றி தேசத்தினருக்கும் நஷ்டமாகும்.

மரபினரின் தர்மங்கள்

எண்	தர்மகர்த்தர்	தர்மங்களின் விவரங்கள்
1	வியாசர்பாடி, வினயக முதலியார்	மயிலாப்பூர், சத்திரத்தில் துவாதசி போஜனம், பிரம்ம உற்சவத்தில் சத்திர அலங்கரிப்பு.
2	சு. கதிர்வேலு முதலியார்	திருமயிலை கபாலீச்சுரத்தில் வசந்த உற்சவம் 7-ம் நாள்.
3	திருமயிலை அம்மாயி அம்மாள்	திருமயிலை கபாலீச்சுரத்தில் பிரம்ம உற்சவத்தில் 2-வது உற்சவம் காலை.மாலை.
4	ஷை	திருமயிலை மாடவீதி ஈசானிய மூலையில் பிரம்ம உற்சவகாலத்தில் பூப்பந்தல்.
5	திருமயிலை வாசிகள் மரபினர்	ஷை ஈசானிய மூலையில் தண்ணீர் பந்தல்.
6	மயிலை. இராமசுவாமி முதலியார்	திருவண்ணாமலையில் அருணாசலேசுவரர் ஆலயத்தில் 10-ம் நாள் மாலை தீப உற்சவம்.
7	புதுவை. தங்கவேலு முதலியார்	திருவற்றியூர் நியாகராஜஸ்வாமி பிரம்ம உற்சவத்தில் மகிபூடி சேர்வை தினத்தில் தம்முடைய சத்திரத்தில் நீர்மோர் தர்மம்.
8	மயிலை. விராசாமி முதலியார்	மயிலை உற்சவத்தின்போது நீர் மோர் தருமம், இதர தருமங்களும்.
9	மணிமங்கலம். கோவிந்தராஜ முதலியார்.	வள்ளுவர் குருகுலம் வித்தியாவிருத்தி.

R. V. PRESS, MADRAS.